பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 15 புதன்கிழமை (29-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 63

# அழுத்தம், ஆக்கிரமிப்பை எதிர்த்து

# தொடர் வெகுசனப் போராட்டங்கள்!

## 5 ஆம் திகதி முதல் ஆரம்பம்;

### அன்று யாழ். செயலகம் முன் மறியல்

யாழ்ப்பாணம், ஜனவரி 29

**தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்தும் —**

**தமிழ் மண்ணில் இராணுவம் ஆக்கிரமிப்பு நடத்துவதையும், மக்கள் மீது அழுத்தங்கள் போடுவதையும் எதிர்த்தும் —**

**யாழ்ப்பாணக் குடாநாடு எங்கும் தொடர்ச்சியான வெகுசனப் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.**

**வெகுசனப் போராட்டங்களின் முதலாவது அங்கமாக எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ். செயலகத்தின் முன்பாக மறியல் நடைபெறும். இம்மறியல் போராட்டத்தில் குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் மக்கள் ஊர்வலமாக வந்து கலந்துகொள்வர்.**

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள கண்மூடித்தனமான இராணுவத் தாக்குதல்களைக் கண்டித்தும், தமிழ் மண்ணை ஆக்கிரமித்த இராணுவத்தை வெளியேற்றக் கோரியும் —

மாணவர் கல்வி பாதிப்பு, பாடசாலைகள் மீது விமானத் தாக்குதல், பொருளாதாரத் தடைகள், மற்றும் பலவித அழுத்தங்கள், தமிழ்ப் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிவாரண உதவிகளை உரிய முறையில் வழங்காமை ஆகியவற்றை ஆட்சேபித்தும் —

தொழில் பாதிப்புற்ற மக்களினதும், இடம்பெயர்ந்த மக்களினதும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை முன்வைத்தும் —

குடாநாட்டில் தொடரான வெகுசனப் போராட்டங்களை நடத்துவதென பொது மக்கள் அமைப்புகள், மற்றும் தொழிற்சங்கங்கள் கூட்டாக முடிவு செய்துள்ளன.

சன சமூக நிலையங்கள், தொழிற்சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலைகள், வாகன உரிமையாளர்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஈழ அகதிகளை அனுப்புவது தொடரும் என அறிவிப்பு

தமிழகத்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது தொடர்ந்து நடைபெறும்.

இப்படி புதுடில்லியில் வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அநேகமாக ஒவ்வொரு வாரமும் இலங்கைத் தமிழ் அகதிகள் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

தாயகம் திரும்பும் அகதிகளின் பாதுகாப்புப் பற்றியும் அவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கான ஏற்பாடுகள் பற்றியும், இலங்கை அரசு வழங்கியுள்ள உறுதிமொழிகளின் அடிப்படையில் இவர்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரிலேயே திரும்பிச் செல்கின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஈழ அகதிகள் திரும்புவது ஜெயலலிதாவுக்கு நிம்மதி!

சென்னை, ஜன. 29

தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப ஆரம்பித்திருப்பது குறித்துத் தாம் பெரிதும் நிம்மதி அடைவதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறாராம்.

இதற்கிடையில் —

திருகோணமலைத் துறைமுகத்திற்கு இன்று காலை வந்தடையவிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுடன் அவர்களின் பாதுகாப்புக்காக 35 இந்திய இராணுவத்தினரும் கப்பலில் வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நாட்டின் மொத்தச் செலவில் ஐந்தில் ஒன்று போருக்கு!

வாஷிங்டனில் உள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர் றிச்சர்ட்ஸன் இலங்கை இன மோதல் காரணமாக இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்புகள் [Economic Costs] பற்றி ஆய்வு செய்திருக்கிறார்.

அந்த ஆய்வின் பிரகாரம் —

★ 1983 முதல் 1987 வரையான காலப்பகுதியில் நாடு 14 ஆயிரத்து 430 கோடி ரூபாவை (440 கோடி அமெரிக்க டொலர்) இன மோதல் காரணமாக பொருளாதார ரீதியில் இழந்துள்ளது.

★ 1988 ஆம் ஆண்டு வரை சராசரி ஒரு தமிழ்ப் போராளிக்கு 5 லட்சத்து 80 ஆயிரம் அமெரிக்க டொலர் என்ற ரீதியில் இலங்கை அரசு செலவிட்டுள்ளது.

★ ஒவ்வொரு சிங்களப் போராளிக்கென – குறுகிய காலத்தில் 3லட்சம் அமெரிக்க டொலரை இலங்கை செலவிட்டிருக்கிறது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மீனவர் மீது சூடு!

யாழ்ப்பாணம், ஜன. 29

மண்டைதீவு - பூநகரி, கல்முனைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்றுக் காலை 6 மணியளவில் குருநகர்க் கடலோரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நேற்று அதிகாலை 2-30 மணியளவிலும் குடாக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

[உ-த-15]

## முச்சந்தி முரளி



சுதந்திரமான கட்சி ...

## மாங்குளம் மின்கோபுரம்; திருத்த வேலை பூர்த்தி!

### கிளிநொச்சிக்கு ஒருமாதத்தில் மின்சாரம்

யாழ்ப்பாணம், ஜன. 29

மாங்குளம் மின்கோபுர திருத்த வேலைகள் எதிர்வரும் ஐந்தாம் திகதி பூர்த்தியாகும். அடுத்த கட்டமாக கிளிநொச்சியில் உள்ள உப மின் நிலைய மின் மாற்றியை [National Grid Sub Station] சீர் செய்யும் வேலைகள் இருவாரங்களுக்கு மேற்கொள்ளப்படும்.

இலங்கை மின்சார சபையின் செயலாக்க முகாமையாளர், யாழ். அரச அதிபர் கே. மாணிக்கவாசகருக்கு இத்தகவலை அறிவித்துள்ளார்.

மாங்குளத்தில் இருந்து 132 கே. வி. மின் அழுத்தத்தில் வரும் மின்சாரத்தை கிளிநொச்சியில் 33 கே. வி. மின் அழுத்தத்துக்கு மாற்றும் மின்மாற்றிகளைச் சீர் செய்ய வேண்டி இருப்பதாகவும் —

அந்த மின் மாற்றிக்குத் தேவையான ஒயில் வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

கிளிநொச்சியில் உள்ள மின் மாற்றிகள் விரைவாக சீர்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் குண்டுவீச்சு!

வவுனியா, ஜன. 29

நேற்றுக் காலை 8.30 மணியளவில் வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் 3 சியாமா செட்டி விமானங்களும் ஒரு ஹெலிக்கொப்டரும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

4 குண்டுகளும், 11 ராக்கெட்டுகளும் வீசப்பட்டன. ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது. பல வீடுகள் சிறு சேதத்துக்குள்ளாகின.

### முறையாகக் கையாளாவிட்டால்

## யாழ்ப்பாண நிலைமை மலையகத்தில் ஏற்படும்!

### அரசுக்கு எச்சரிக்கை

மலையகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பயங்கர நிலைவரத்தை முறையாகக் கையாளாத பட்சத்தில் அது யாழ்ப்பாணம் போன்ற நிலைமைக்கு வழி சமைத்ததாகிவிடும்.

தோட்டப் பகுதிச் சங்கங்களின் கூட்டுக்குழுவின் இணைப்பாளர் டாக்டர் சுனில் இரத்தினப்பிரியா முன்கண்டவாறு அரசை எச்சரித்திருக்கிறார்.

இதே சமயம் —

மலையகத்தில் தற்போது நிலவும் பதற்ற நிலையால் அங்கு தொழிற்சங்கங்களுக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பது, தொழிற்சங்கக் கூட்டங்களை ஒழுங்கு செய்வது ஆகியன தடைப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

[ஓ-எ]

## மீண்டும் பங்கீட்டு உணவு 4வாரங்களுக்குக் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். செயலகத்தில் பங்கீட்டு உணவு விநியோகம் மூன்று மாதங்களின் பின் மீண்டும் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள பொருள்களின் கையிருப்பை அடிப்படையாகக் கொண்டு, 'அ' 'உ' அட்டை வைத்துள்ள குடும்பங்களுக்கு அரிசி, சீனி, தானிய வகை என்பன எதிர்வரும் முதலாம் திகதி முதல் கட்டுப்பாட்டு விலையில் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் வழங்கப்படவுள்ளன.

ஒரு அங்கத்தவருக்கு —

2 கிலோ அரிசி, 250 கிராம் சீனியும் —

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சுதந்திரக்கட்சியில் 4 அணிகள்

கொழும்பு, ஜன. 29

சுதந்திரக் கட்சிக்குள் நான்கு அணிகள் இயங்குகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

அனுரா அணி, சிறிமா அணி, திலக் கருணாரத்னா அணி மற்றும் சுயேச்சை அணி ஆகியவையே இவை என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல்வேறு எம். பிக்கள் கட்சிக்குள் தத்தமக்கென குழுக்களை அமைத்துக் கொண்டதற்கு சுதந்திரக் கட்சி முன்னணி எம். பிக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்றும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

[இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

## யாழ்ப்பாணக் கிளை

## உதவி தாதியாளர் பயிற்சி ஆசிரியர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தாதிகள் பயிற்சித் தகைமைச் சான்றிதழ் உள்ள அனுபவம் உள்ளோர், யாழ்ப்பாண மாவட்டத்தில் எவ்விடத்திலும் சென்று பயிற்சி அளிக்கக் கூடியவர்கள் 07-02-92 க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். 08-02-92 பிற்பகல் 3.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை எமது பணிமனையில் நடைபெறும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
28-01-92.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
[C/1372]


# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 30 — 06 — 1918



மறைவு: 29 — 01 — 1981

## அமரர் கனகசபை தணிகாசலம்

திதி: 28 — 01 — 1992

என்றும் எங்கள் இதயத்தில் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வமே! உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'தணிகை',
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(5010)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 9 — 3 — 1957

மறைவு: 30 — 12 — 1991

## திருமதி பத்மநாதன்

தாய் மடியில் தவழாது தரணியில் — சிறிய
தாய் மனம் குளிர வளர்த்த தயாநிதியே
தாய் மாமன் மகன்றனை மணந்து — பூவுலகில்
தங்கச் செல்வங்கள் ஐந்தினைப் பெற்றெடுத்தாயே.

மூத்த இரு செல்வங்கள் போனவழி — நீ
முகம் வாடி போகத் துடித்திருந்தாயே
முப்பத்து நான்காண்டில் உன்கதை முடித்து நீ
மூத்த செல்வங்கள் வழி போனாயோ.

பத்து ஒன்பது ஆறாண்டுகள் அன்பினைச் சொரிந்து
பாபு, கார்த்திக், சிந்து என்றழைத்து
பாரினில் எம்மைப் பேணி வளர்த்த அன்னையே
பார்த்தோர் துடிக்க எமை ஏன் பிரிந்தீர்.

மாமியர் இருவரும் மகிழ்வொடு அணைப்பர்
அப்பா பாட்டா அம்மம்மா அன்பொடு வளர்ப்பர்
படிப்பை முடித்து அன்ரா வந்ததும்
அதன்பின் நீங்கள் மாமா அன்ரா செல்லப்பிள்ளைகள்
சிறப்புடன் வாழ்வீர் என்றெண்ணினையோ.

இன்று நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றி, அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

பத்மநாதனும் (கணவன்),
பிள்ளைகளும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[19514]

## மாங்குளம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
செய்யப்படும் பட்சத்தில், அடுத்த மாத இறுதியில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மின் விநியோகம் கிடைக்கும் சாத்தியம் உண்டு என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-5]


# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-02-28 வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. நுண்ணுயிரியலில்- உதவி விரிவுரையாளர்/ தற்காலிக உதவி விரிவுரையாளர்.
2. மிருக விஞ்ஞானத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளர்.

**சம்பள அளவுத்திட்டம்:**

உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500-10X200 - 6,500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் 4,500/- சம்பள படியில் வைப்பார்.

தற்காலிக உதவி விரிவுரையாளர்;
ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

1. மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும், இதர விவரங்களையும் இப்பல்கலைக்கழகத்தாபனக் கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களை தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23X10 ச. மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்புதல் வேண்டும்.
3. அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் என்பனவற்றில் உள்ள விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.
4. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணம்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-01-27.

[இ-1241]


# நாட்டின் கதாநாயகனாக அமைச்சர் தொண்டமான்

## காமினி திஸநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 29
நாட்டின் கதாநாயகராக திரு. தொண்டமான் விளங்குகின்றார்.

முன்னாள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா கம்பஹாவில் நடந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுக் கூட்டத்தில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. காமினி திஸநாயக்கா மேலும் சொன்னதாவது;

ஐ. தே. க. அரசாங்கத்தில் பலம் வாய்ந்த அமைச்சராக திரு. தொண்டமான் இருக்கிறார். இவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சமரச யோசனைகளை சமர்ப்பித்திருக்கிறார். அவற்றை அரசினால் நிராகரிக்க முடியும். ஆனால் அந்த யோசனைகளுக்கு எதிராக அரசுத் தலைவர்கள் பேசுகின்றார்கள் இல்லை; ஏன் என்று நாம் அதிசயத்துடன் கேட்க வேண்டியுள்ளது. தொண்டமான் இன்று 'ஹீரோ'வாக இருக்கிறார்.

இந்த நாட்டிலே பிறந்த எம்மைப் போன்றவர்களுக்கு இன்று இடமில்லாது போய் விட்டது.

நுவரெலியா தொகுதியில் ஆகக் கூடுதலான வாக்குகளை நான் பெற்றிருந்தேன். இன்று எனக்கு ஓர் ஆசனம் கூட கிடைக்கவில்லை. இப்பகுதிகளில் இன்று யாரின் ஆட்சி நிலவுகிறது? தொண்டமானின் அதிகாரத்தின் கீழ் தோட்டங்கள் உள்ளன. ஐ. தே. க. அரசில் தொண்டமான் இருக்கிறார். தொண்டமான் யோசனைகளைப் பின்னர் ஏன் அவர்கள் கண்டிக்கக்கூடாது?

வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்புக்காக தொண்டமான் வாதாடுகின்றார். அதனை ஏன் அரசுத் தலைவர்கள் கண்டிக்கக்கூடாது?

இப்படி திரு. காமினி திஸநாயக்கா கேட்டார்.

# திருமலையில் 9 தமிழர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 29
திருகோணமலை மாவட்டத்தில் 48 ஆம் கொலனிப் பகுதியை கடந்த 22ஆம் திகதி சுற்றி வளைத்த படையினர், 9 தமிழ் மக்களைக் கைது செய்து தாக்கி முகாமுக்குக் கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாரிமுத்து மாணிக்கராசா [26 வயது], நாகராசா யோகச் சந்திரன் [22 வயது], சின்னத்தம்பி கந்தசாமி (30 வயது], சரவணமுத்து இரத்தினசிங்கம் [24 வயது], பாக்கியம் தயா [17 வயது], சபாபதிப்பிள்ளை ஈஸ்வரன் [20வயது], சித்திரவேல் கோணசிங்கம் [22 வயது], தாமோதரம் இரத்தினம் [34வயது], காளிக்குட்டி வைரமுத்து [40 வயது] ஆகியோரே கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

# தாண்டிக்குளத்தில் வைத்து ஓர் ஆண், 2 பெண்கள் கைது

கொழும்பு, ஜன. 29
நடுத்தர வயதான நபர் ஒருவர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 20 தங்கக் காசுகளை உள்ளங்கிக்குள் வைத்துக் கடத்த முற்பட்ட போது வவுனியா- தாண்டிக்குள முகாமில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டார் என்றும்—

ஆறு பென்ரோர்ச் பட்டரிகளைக் கடத்த முயற்சித்த பெண் ஒருவரும் படையினரிடம் சிக்கினார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சுண்ணாம்புப் பார்சலுக்குள் பிளக்குகளை ஒளித்து வைத்துக் கடத்த முயன்ற பெண் ஒருவரையும் படையினர் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்: 05 — 05 — 1924



மறைவு: 30 — 12 — 1991

அமரர்

## கதிரிப்பிள்ளை கந்தையா

[சமாதான நீதிவானும், பன்குளம் கந்தையா, ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்]

பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், அறிவின் சுடரொளியாய், ஒளிவீசி, எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவாக இன்று புதன்கிழமை '' துவாரகை '' இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-1446)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புகளுக்கு அஞ்சி ஓடும் அரசியல்வாதி அல்லன் நான்

## சிங்களப் பத்திரிகைக்கு தொண்டா பேட்டி

கொழும்பு, ஜன. 29

எதிர்ப்புகள், கண்டனங்கள், கூக்குரல்கள் இவற்றுக்கு அஞ்சுபவன் நான் அல்லன். நான் யாருக்கும் பயந்து ஓடும் அரசியல் வாதியும் அல்லன். அப்படிப்பட்டவர்கள் இந்த நாட்டில் அநேகர் இருக்கிறார்கள். நான் இந்தியாவுக்குச் செல்வது தனிப்பட்ட தேவைக்காகவே

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கடந்த வியாழக்கிழமை இந்தியா புறப்படும்முன் சிங்கள வார இதழான 'லங்கா தீப' வுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'லங்கா தீப' செய்தியாளர் துஷார குணரத்ன "உங்கள் யோசனைக்கு எதிர்ப்பு எழுந்துள்ளதால் தான் இந்தியா போகிறீர்களா?" என்று கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே திரு. தொண்டமான் மேற்கண்ட காரமான பதிலை அளித்தார்.

தொண்டாவின் பேட்டி வருமாறு:-

கே: இன்று தோட்டப் பகுதிகளில் நடைபெறும் சம்பவங்கள் மலைநாடு போராட்டத்துக்கான ஆரம்பம் என சில அரசியல்வாதிகள் கூறுகிறார்களே!



ப: தோட்ட மக்களுக்கு புதிதாக ஒரு மலைநாடு அவசியமில்லை. தோட்டப்பகுதி இப்போதே மலைநாட்டில் தான் உள்ளது. சிங்களத்திலும் இப்பகுதியை கந்துரட்ட [மலைநாடு] என்று தானே கூறுகிறார்கள்! மலைநாடு என்றால் "கந்துரட்ட" தான் என்பதை சிங்கள மக்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

கே: இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நீங்கள் சமர்ப்பித்துள்ள யோசனைகள் காரணமாக உங்களை அமைச்சர் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென அரசுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறதே!

ப: நான் ஒரு விளையாட்டுப் பொம்மை அல்ல. ஒவ்வொருவரும் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆடும் விளையாட்டுப் பொம்மையாக இருக்க நான் தயாரில்லை. நான் முன்வைத்திருப்பது எனது யோசனைகளை. எனது யோசனைகளை எதிர்ப்பவர்கள் இன்றுவரை இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைக்கவில்லையே!

கே: இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நீங்கள் சமர்ப்பித்த யோசனை தொடர்பாக இப்போது என்ன கூறுகிறீர்கள்?

ப: ஒன்றும் கூறவில்லை. யோசனைகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுமுன் வைக்கப்பட்டிருப்பதால் நான் அது பற்றி ஒன்றும் கூறமுடியாது.

கே: அப்படியானால் யோசனை தொடர்பாக முன்பு கூறியவை பிழையானவை என நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?

ப: இல்லை. நான் பிழைவிட்டதாக ஏற்றுக்கொள்ள முடியாது. யோசனை தொடர்பாக நான் பத்திரிகைகளுக்குக் கருத்துத் தெரிவித்தது. அந்த யோசனைகள் தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பதாகவே மேலும் எனது கட்சி சார்பாக நான் பேசுவதற்கு யாருடைய அனுமதியும் எனக்குத் தேவை இல்லை.

கே: புலிகள் தலைவர்களைச் சந்திக்க யாழ்ப்பாணம் செல்வதாக இருந்த உங்கள் பயணத்துக்கு என்ன நடந்தது?

ப: ஒன்றும் நடக்கவில்லை. இன்னமும் போகவில்லை. போவதற்கு முன்னால் உங்களுக்குத் தெரிவிப்பேன்.

கே: உங்கள் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஆங்காங்கே நடத்தப்படும் கூட்டங்கள் பற்றி ஏதும் கூறுவீர்களா?

ப: இந்தக் கேள்வியைக் கேட்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நாட்டில் ஆங்காங்கே இவ்வாறு நடக்கும் கூட்டங்களுக்கு 200 பேர் வரையில் மட்டுமே சமுகமளிக்கிறார்களாமே. இதன் மூலம் இனவாதிகளை இந்த நாட்டு மக்கள் நிராகரித்துள்ளார்கள் என்பது தெரிகிறது அல்லவா!

[ஒ-10]

## வவுனியாவுக்கு மேலதிக கடுகதி ரயில் சேவை

கொழும்பு, ஜன. 29

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையே பெப்ரவரி 27 ஆம் திகதி தொடக்கம் மேலதிக கடுகதி ரயில் சேவை ஒன்று நடத்தப்படும் என்று ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து இரவு 11 மணிக்கு புறப்படும் ரயில் அதிகாலை 4-35 மணிக்கு வவுனியாவைச் சென்றடையும். இந்த ரயில் அன்று இரவு 11மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்பட்டு மறுநாள் காலை 5 மணிக்கு கோட்டையை அடையும்.

[ஒ-10]


A/L-MATHS

திரு. குணசிங்கம்
B. Sc. [Hons]

93 - A/L
புதிய பிரிவு

செவ்., வியா. 3-00 p.m.
PURE. — 3-00 p.m.
APP. — 4-00 p.m.

Personal
New Science
Centre,
எழிலகம் முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(சி-1430)


## வவுனியா - கொழும்பு ரயிலில்

# தமிழ்ப் பயணிகளிடம் கொள்ளை; இராணுவத்தினரை தேடி வேட்டை

கொழும்பு, ஜன. 29

வவுனியாவில் இருந்து கொழும்புக்கு ரயிலில் சென்ற தமிழ்ப் பயணிகளிடம் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் சிலரை சந்தேகத்தின் பேரில் பொலீஸார் தேடி வருகின்றனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இச் சம்பவம் குறித்து இரு சந்தேக நபர்களை பொலீஸார் விசாரித்தனர். அப்போது ரயில் கொள்ளை எப்படி திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றது என்ற விவரம் வெளியானதாம்.

12 பேர் கொண்ட அந்தக் கொள்ளைக் கோஷ்டி வியாங்கொடைக்கு அருகில் வைத்து ரயிலில் ஏறி பயணிகளிடம் தம்மை பொலீஸார் அல்லது இராணுவத்தினர் என்று முதலில் தங்களை அடையாளம் காட்டுவார்களாம்.

அதன் பின்னர் பயணிகளிடம் நீங்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்று அக்கோஷ்டியினர் அச்சுறுத்துவார்கள் என்றும் —

பின்னர் பயணிகளை அக்கோஷ்டி ரயிலில் இருந்து இறக்கி, விசாரணை செய்ய வேண்டும் என்று கூறி ஒதுக்குப்புற இடத்திற்குக் கூட்டிச் செல்வார்களாம்.

அங்கு வைத்து பயணிகளிடமிருந்து பெறுமதியான தங்க ஆபரணங்களையும், பணத்தையும் அக்கோஷ்டியினர் கொள்ளையடித்துச் சென்று விடுவார்களாம்.

(ஒ-எ)


விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L

★ மாலை நேர வகுப்புகள்
[மாலை 3 மணி முதல் 6 மணி வரை]
★ பகல் நேர வகுப்புகள்
[காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை]
★ சனி, ஞாயிறு வகுப்புகள்
[காலை 8 மணி முதல் பிற்பகல் 2மணி வரை]

★ புதிய பிரிவுகள் ★
ஆரம்பம்: 01-02-1992

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒன்றிணைந்த போதனை.
★ கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும்.
[சி-1368]


## பிடிபட்டனர்

யாழ். நகரப் பகுதிகளில் இரவு வேளையில் திருட்டு முயற்சிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஐவர் பிடிக்கப்பட்டு, காவலதுறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 23 ஆம், 25 ஆம் திகதிகளில் பிரஸ்தாப ஐவரையும் நகரில் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புச் சேவையினர் பிடித்திருந்தனர்.

[ஒ-15]

## இறந்தவர்களில் ஒருவர் தமிழர்

சீனக்குடா விமானத் தளகுண்டு வெடிப்பில் இறந்தவர்களில் ஒரு தமிழரும் அடையாளம் காணப்பட்டுள்ளார். வேலு வேலாயுதம் என்ற சிவிலியனே அடையாளம் காணப்பட்ட தமிழர் ஆவார்.

மற்றும் சார்ஜன்ட் இருவர், கோப்ரல் ஏழுபேர், லான்ஸ் கோப்ரல் பத்துப்பேர் ஆகியோரும் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## தமிழர் அடக்கப்பட்டால்

# இந்தியா 56 துண்டுகளாக உடைந்து சிதறிவிடும்!

## சிவாஜிகணேசன் எச்சரிக்கை

சென்னை, ஜன. 29

"தமிழர் மீது கன்னடர்கள் நடத்தும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தாவிட்டால் இந்தியா 56 துண்டுகளாக உடைந்து சிதறும்."

— இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் தமிழ்நாடு ஜனதா தள் தலைவர் சிவாஜி கணேசன், சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவில் உச்ச அதிகாரம் மிக்க உயர் நீதிமன்றமும், நாடாளுமன்றமும் காவிரி நீர்ப்பிரச்சினை சம்பந்தமாக விடுத்த உத்தரவுகளை கர்நாடகத்தில் உள்ள காங்கிரஸ் அரசு ஏற்று நடைமுறைப்படுத்தவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய அவர் —

இந்திய மத்திய அரசிலும், கர்நாடகத்தில் - மாநில அரசிலும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் காங்கிரஸ் கட்சி தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தினார்.

இந்நிலை நீடித்தால், சுதந்திரத்திற்கு முன்பிருந்தது போல இந்தியா மீண்டும் 56 தேசங்களாகத் துண்டுபடும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன்" — என்றும் அவர் சொன்னார்.

[ப]

## முத்திரை வந்தது

கடந்த வெள்ளிக்கிழமை வந்து சேர்ந்த "குமாரி" கப்பலில் ஒரு தொகை முத்திரைகளும் எடுத்து வரப்பட்டன.

திங்கள் காலை யாழ். பிரதம தபாலகத்தில் முத்திரைகளைப் பெற்றுக்கொள்ள மக்கள் பெருமளவில் கூடினர்.

[உ-51]


கம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language

சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் 1-2-1992
10-30 மணி

School of Business Administration
16, 3rd Cross Street,
Jaffna.
[சி/1434]


## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் இராமநாதன் தியாகராசா

(கணக்காளர் மாலைதீவு, முன்னாள் கணக்காளர் - உஷா இன்டஸ்றீஸ், இரத்மலானை)

தோற்றம்: 04 — 04 — 1938

மறைவு: 03 — 02 — 1991

திதி: 29 — 01 — 1992

பெற்றோர்க் கோர் குலவிளக்காய்
மனைவிக்கு அன்புக் கணவனாய்
பிள்ளைகளுக்கு பாசமிகு தந்தையாய்
சகோதரிகளுக்கு அருமைச் சகோதரனாய்
மாநிலத்தில் இருந்த நீர் - எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
வானுலகம் ஏகி ஓராண்டு ஆனாலும்
என்றும் ஆறாது எம் துயரம்
மறவாது எம் இதயம்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், சின்னமாமி, மருமக்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.

172/10, கண்டி றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.

[19512]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

உலோக, பிளாஸ்ரிக், கன்னார், அஸ்பெஸ்டஸ் கொள்கலன்கள் தேவை. அளவு, விலை விவரங்களுடன் தொடர்புகொள்க: இல. 381, மே/பா உதயன். [19489]

புடைவை வியாபாரம் செய்யக்கூடிய பெண்பிள்ளை ஒன்று தேவை. நேரில் வரவும். மூன்று மைல் சுற்றாடலில் இருப்பவர் விரும்பத்தக்கது. த. சங்கரப்பிள்ளை அன்சன்ஸ், 21, மக்கள் நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [19499]

### மெஷின்மைன்டர் தேவை

தற்காலிக/ பகுதி நேர அடிப்படையில் எமது ஸ்தாபனத்திற்கு பிளேற்றிங் உட்பட, மெஷின் ஓடக்கூடிய மெஷின்மைன்டர் தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். தென்னிந்திய திருச்சபை காரியாலயம், வட்டுக்கோட்டை. (சி/1432]

### பழைய அரசியல் புத்தகம்

ஈழத்து பழைய அரசியல் சஞ்சிகைகள், புத்தகங்கள நல்ல விலையில் கொள்வனவு செய்யப்படும் யாழ். பழைய புத்தகக்கடை, 32, அருச்சுனா, (ஸ்ரான்லி) வீதி. [5021]

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

### புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

### சிறுகதைத் தொகுப்பு

25 சிறுகதை எழுத்தாளர்களின் கருத்துமிக்க சிறுகதைகளின் தொகுப்பு ஒன்றினை 'மீரா' வெளியிடவுள்ளது. சிறுகதை எழுத்தாளர்கள சமகால நிகழ்வுகளை சிறுகதைகளாக்கி அனுப்பி வையுங்கள். 'மீரா' வெளியீடு: 201, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [19511]

### வாடகைக்கு

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் சிறிய, கௌரவமான குடும்பத்திற்கு இரு அறை, குசினி விறாந்தை, தனிக்கிணறு, மலசலகூட வசதிகளுடன் பகுதி வீடு வாடகைக்கு உண்டு. கடித மூலம் தொடர்புகொள்ளவும்: இல. 380, மே/பா உதயன். [19488]

## முஸ்லிம் கவுன்ஸில் நேற்று ஆராய்வு

இனப்பிரச்சினைக்கு அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்துள்ள யோசனைகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் நேற்று [செவ்வாய்] கூடி ஆராய்வதாக இருந்தது. [ஒ-ன]

---

உ

## தசாக அறிவித்தல்

### திருமதி தாக்ஷாயணி சுப்பிரமணிய ஐயர்

திருமதி தாக்ஷாயணி சுப்பிரமணிய ஐயர் அவர்களது அந்திமக் கிரியைக்கு வருகை தந்து அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகள்.

கீழ் வரும் கிரியைகள் அவரது சிவன் கோவிலடி, சாவகச்சேரி இல்லத்தில் கீழ் குறிக்சப்பட்ட திகதிகளில் நடைபெறும்.

1. தசாகம் — 31 - 01 - 1992 வெள்ளிக்கிழமை
2. சபிண்டீகரணம் — 01 - 02 - 1992 சனிக்கிழமை

சோ. சுப்பிரமணிய ஐயர் - குடும்பத்தினர்.

சிவன் கோவிலடி,
சாவகச்சேரி.

[சி-1433]

---

## 6ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 05 — 1965

மறைவு: 04 — 02 — 1986

செல்வன்

### பொன்னம்பலம் உமாபரன்

[யாழ். இந்துக் கல்லூரி, முன்னைநாள் க. பொ. த. - உயர்தர இறுதி ஆண்டு மாணவன்]

திதி: 29 1 1992 அபரத் தசமி

அன்புச் செல்வமே! என்றும் எம் நெஞ்சங்களை விட்டகலாது, எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகப் பெற்றுக் கொண்டிருக்கிறாய். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவன் திருப்பதங்களை என்றும் வேண்டிக் கொண்டிருக்கிறோம்.

அம்மா, அப்பா, அண்ணன்மார்,
அண்ணி, அக்காமார், அத்தான்மார்,
மருகிகள், பெறாமகள், உறவினர்,
நண்பர்கள்.

215, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[19502]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 - 03 - 1917

மறைவு: 08 — 02 — 1991

திருமதி

### விஸ்வலிங்கம் நாகேஸ்வரி

திதி: 29 — 01 — 1992

தித்திக்க அமுதூட்டி தாலாட்டி
புத்திக்கு வித்தாக நல்ல அறிவூட்டி
சித்திக்கும் இறை வேண்டி நாம் வாழ
பக்திக்கு வித்தாகி பரமனடி சேர்ந்தாய் அம்மா!

ஆத்மா சாந்திக்கு என்றும் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

டாக்டர் வி. சிறீஸ்காந்தன்,
றஞ்சிதா வைத்தியசாலை,
சண்டிலிப்பாய்,
மானிப்பாய்.

[5020]

---

## 15ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 25 — 01 — 1958

உதிர்வு: 16 — 12 — 1991

செல்வி

### சண்முகநாதன் தனேஸ்வரி
(வவா)

கால அரக்கன் கையில் கன விரைவாய்
கோலமகள் "வவா" சிக்கிக் கொண்டு
எமைப் பிரிந்தாள்!
ஞாலம் உளநாள் வரை அந்ஞாபகம் போகாதே!
சீலம், அடக்கம், செயல் திறமை என்ன இருந்தாலும்
தனேஸ்வரியை சற்குண முத்தமிழ் மகளை
நாளும் தெரிந்தே நடந்த இளம் மயிலை
மேலும் வாழ்வுத் துயரங்கள் மேவாமல்
பாலும் திகட்டு மொழியர் சாயி பகவானே!
உத்தரவு போட்டார் உவப்பாய் அடிசார்ந்தாள்!
அத்தன் அருளால் கவலை அத்தனையுமே மறப்போம்.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

பிரம்படி, கொக்குவில் (29 01-1992) [19503]

---

ஓம்
விராட் விஸ்வப்பிரம்மணே நம

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சரவணமுத்து சிவக்கொழுந்து

[ஆச்சாரியார்]

தோற்றம்: 13-06-1920

மறைவு: 21-01-1990

திதி: 29-01 1992

பாசத்தின் உறைவிடமே! பண்பு நிறை பேருருவே!
மாசற்ற மனமுள்ளோய் மறைந்ததேன் மாணிக்கமே!
பாருக்குள் உங்களைப் போல் பண்பாளர்
பிறப்பாரோ!
அன்புக்கு அணிகலனே ஆருயிரின் இருப்பிடமே!
ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவு ஒழியாது
பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பாசம் மறவாது
தூயவன் வாழ்வில் எமை சிறப்புடன் வழி நடத்தி
சீருடன் பாதுகாத்தாய் தந்தையே!
இறப்பிலும் இறைவனில் நீர் இணைந்திட
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[19507]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இதுவும் அதுவாகும்!

இனப்பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்துவரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும்.

அந்தக் கட்சிக்குள் உள்ள ஒரு குழுவினர் இந்தக் கருத்தை முன் வைத்திருக்கிறார்கள். அதற்கான காரணங்களையும் அவர்கள் சுட்டிக்காட்டி உள்ளார்கள்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு சகல தரப்பாரின் கருத்திணக்கமும் அவசியம் எனக் கூறி இரண்டு வருடங்களுக்கு முன்னர் அனைத்துக்கட்சி மாநாடு கூட்டப்பட்டது. ஆரம்பத்தில் அதில் கலந்து கொண்ட ஸ்ரீ. ல. சு. கட்சி பின்னர் மெதுவாகப் பின் வாங்கிப் பகிஷ்கரிக்கத் தொடங்கியது; வெளியேறிக் கொண்டது.

அனைத்துக் கட்சி மாநாட்டில் ஆளுங் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ, ஸ்ரீ. ல, சு. கட்சியோ தமது சொந்தத் தீர்வுத் திட்டம் எதனையும் முன் வைத்ததில்லை. பிரதான கட்சிகள் இப்படிப் பின்னடித்து நிற்க, உதிரிக் கட்சிகள் மாதாந்தம் கூடி காலத்தை வீணாக்கினவே தவிர, உருப்படியாக எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. அனைத்துக் கட்சி மாநாடே வெறும் புஸ்வாணமாகி விட்டது!

அனைத்துக் கட்சி மாநாட்டின் இயலாத் தனத்தின் முடிவு வெளியே தெரிவதற்கு முன்னர், தான் தொற்றிக் கொள்வதற்கு வசதியாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை உருவாக்கியது அரசாங்கம்,

ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பியான திரு. மங்கள முனசிங்கா கொண்டு வந்த ஒரு தனிநபர் பிரேரணையை அப்படியே கவ்விப் பிடித்துக் கொண்டு, அவரையே தலைவராகக் கொண்ட தெரிவுக் குழுவை உண்டாக்கியது. இனப்பிரச்சினை விவகாரத்தில் சுதந்திரக் கட்சி வெளியே நின்றால் தனக்கு எப்போதும் தொல்லை என்பதை அறிந்தே திரு. பிரேமதாசா இந்தத் தந்திரத்தைக் கையாண்டார்.

ஆனால் அனைத்துக் கட்சி மாநாட்டின் கதியே, தெரிவுக் குழுவுக்கும் நடக்கப் போகிறது என்பது தென்படத் தொடங்கி விட்டது. தெரிவுக் குழு நியமிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்ட போதிலும், ஐ. தே. கட்சியோ, சுதந்திரக் கட்சியோ தீர்வுக்கான தமது யோசனைகளை இன்னும் சமர்ப்பிக்கவில்லை. மிக மெத்தனமாக ஒளித்து விளையாடுகின்றன.

அதற்கும் மேலாக சுதந்திரக் கட்சி தெரிவுக்குழுப் பொறியிலிருந்து மெதுவாக வெளியே சென்றுவிட எத்தனிக்கிறது.


இனப் பிரச்சினையைத் தீர்ப்பது ஆட்சிக் கட்டிலில் உள்ளவர்களின் பொறுப்பு; அதில் ஏன் நாம் வீணாக மாட்டிக் கொண்டு எங்கள் அரசியலைக் கெடுக்க வேண்டும் என்று சிந்திப்பதும்—

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கக் கட்சி ஏதாவது செய்ய முனைந்தால் அதனைத் தடுத்து தாம் அரசியல் லாபம் பெறவேண்டும் என்று சிந்திப்பதும் — எதிரணியில் இருக்கும்போது இரண்டு கட்சிகளுக்குமே வழக்கமாகி விட்டது. அதனை மாற்றுவது கஷ்டம்.

ஆகையால் கருத்திணக்கம் கண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பது வெறும் பகற்கனவு. ஆளும் கட்சிக்குப் போதிய துணிச்சல் இருந்து தீர்வு ஒன்றை நடைமுறைப்படுத்தினால் அன்றி இந்தப் பிரச்சினை இழுபடவே செய்யும்.

# புலிகளின் அணுகுமுறையை தி.மு.க. ஆதரிக்கவில்லை!

## காஞ்சிபுரம் கூட்டத்தில் கருணாநிதி அறிவிப்பு



காஞ்சிபுரம், ஜன. 29

''விடுதலைப் புலிகள் தங்கள் மக்களுக்காகப் போராடுகிறார்கள். ஆனாலும் அவர்கள் தமிழ் நாட்டில் கையாண்ட அணுகுமுறையை அன்றும், இன்றும் தி. மு. க. ஏற்றுக்கொண்டதில்லை; களத்தில் அவர்கள் நிற்கிறார்கள். அதனால்தான் அவர்களை ஆதரிக்கிறோம் என்று ஏற்கனவே நாங்கள் அறிவித்திருக்கிறோம்.''

--இவ்வாறு கூறினார் முன்னாள் தமிழக முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு. கருணாநிதி.

சில வாரங்களுக்கு முன்னர் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஆரம்பத்தில் ஈழத் தமிழர் வாழ வேண்டும் என்று எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு உதவ முன்வந்தோம்; எல்லோரும் சேர்ந்து போராளிகள் குழுக்களுக்கு ஆதரவு தந்தோம். ரெலோ இயக்கம் தி. மு. கவின் ஆதரவைப் பெற்றது; ஈ. பி. ஆர். எல். எவ். கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவைப் பெற்றது; எம். ஜி ஆரின் ஆதரவு புலிகளுக்குக் கிடைத்தது. இதை மறுக்க முடியுமா?

அவர்கள் இங்கே வந்த போது அவர்கள் கையில் ஏ. கே. 47 துப்பாக்கி இல்லை; ஏவுகணை இல்லை. அவர்களுக்கு இராணுவப் பயிற்சி தந்து அவர்களைப் போராளிகளாக மாற்றிய பெருமை யாருடையது? அப்போது இங்கே நடந்தது எம். ஜி. ஆர். ஆட்சி; அங்கே நடந்தது இந்திரா ஆட்சி. இதையாவது மறுக்க முடியுமா?

பயிற்சி முகாம்கள் இருந்த போது கூட முகாம்கள் இல்லை என்று இந்திரா கூறவில்லையா?

விடுதலைப் புலிகளை எம். ஜி. ஆர். 1987 வரை தான் ஆதரித்தார் என்கிறார்கள். அதன் பிறகு அவர் இறந்து விட்டார்.

ஆனால் 1987 இல், புலிகளுடன் தான் தொடர்பு கொண்டுள்ளதாகவும் பேசிக்கொண்டிருப்பதாகவும் ஜெயலலிதா அறிவித்தார். அது பத்திரிகைகளிலும் வெளியாகி உள்ளது.

எம். ஜி. ஆராவது முதலமைச்சர் என்ற தகுதியில் புலிகளுடன் பேசினார். ஜெயலலிதா அப்போது எந்த அடிப்படையில், எந்தத் தகுதியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசினார்.

ஆட்சியில் இருப்பவர்கள் யாரோ அவர்களை ஆதரிப்பது விடுதலைப் புலிகளின் வழக்கமாக இருந்தது. அவர்கள் பலே ஆட்கள். 1989 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஜெயலலிதாதான் முதலமைச்சராக வருவார் என்று எண்ணி ஜெயலலிதாவுடன் பேசியிருக்கிறார்கள்.

அந்தப் பேச்சுகளின் போது பத்மநாபா கொலை பற்றி அவர்கள் பேசிக்கொண்டார்களா என்று நான் கேட்கக் கூடாதா?

ஜெயலலிதா புலிகளுடன் பேசியது நாட்டுக்குத் தெரிய வேண்டாமா?

அதற்காகத்தான் 1983 இல் இருந்து நடந்தவற்றுக்கு நீதி விசாரணை நடத்துமாறு கேட்கிறோம். இவர்களுக்கு உள்ள தொடர்பை புட்டு வைக்க உச்ச நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட நீதி விசாரணை நடத்துமாறு கேட்கிறோம்— இவ்வாறு கருணாநிதி மேலும் கூறினார். (உ)

## வீடமைப்பு கடனை செலுத்துவதற்கு கால அவகாசம் மேலும் நீடிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் வீடமைப்புக் கடன் பெற்றவர்கள், தமது கடனைத் திருப்பிச் செலுத்தும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சில சலுகைகளின் அடிப்படையில் கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை கடனைத் திருப்பிச் செலுத்தலாம் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தக் கால எல்லை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ள சலுகைகள் வருமாறு:

★ மீளச் செலுத்தப்பட வேண்டிய முழுத்தொகையையும் (முதலும் வட்டியும் மாத்திரம்) ஒரே தடவையில் செலுத்துமிடத்து 10 சத வீத கழிவு உண்டு.

★ தவணை தப்பிய அறவீடுகளுக்கான தண்டப்பணம் அறவிடப்படமாட்டாது.

## மலேசியா, சிங்கை தமிழரும் ராஜீவ் கொலைக்கு உதவினர்

### புலனாய்வுக் குழு கூறுகிறது

சென்னை, ஜன. 29

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை படுகொலை செய்தவர்களுக்கு மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் வாழும் தமிழர்களும் நேரடியாக உதவினார்கள் என்று தாம் சந்தேகிப்பதாக, இக்கொலையை விசாரித்து வரும் இந்திய விசேட புலனாய்வுக் குழுவினர் கூறியிருக்கின்றனர்.

தாம் மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று நடத்திய விசாரணையில் இந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் நிதி, நவீன ஆயுதங்கள் மற்றும் பிறவகையான உதவிகளை கொலையாளிகளுக்கு வழங்கியிருப்பது தெரிய வந்திருப்பதாக இந்தக் குழு கூறியிருக்கிறது.

இக்கொலையை விடுதலைப் புலிகள் நடத்தினார்கள் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ராஜீவைக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட பெல்ட் குண்டு, இலங்கையில் வைத்து ஓரளவு தயாரிக்கப்பட்டு, பின்னர் தமிழ் நாட்டுக்கு எடுத்து வரப்பட்டதென்றும் விசேட புலனாய்வுக் குழுவின் தரப்பில் கூறப்படுகிறது. (உ-எ)

## ஆதரவற்றவர்களைப் பேண இந்துக்கள் முன்வர வேண்டும்

### தங்கம்மா அப்பாக்குட்டி அழைப்பு

''தற்போதைய போர்க்கால சூழலில் அநாதைகள், ஆதரவற்றவர்களைப் பேண இந்துக்கள் முன்வர வேண்டும்.''

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஆசியுரை வழங்கிய போது சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கடந்த சனிக்கிழமை ஆத்மஜோதி திரு. நா. முத்தையா தலைமையில் இடம்பெற்ற பிரஸ்தாப நிகழ்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் கூறியதாவது:-

எம்மத்தியில் பணம் படைத்த பலர் இருக்கின்றனர். ஆயினும் தொண்டு உள்ளம் படைத்த தொண்டர்கள் இவ்வாறு இருப்பதால், நாம் செய்ய வேண்டியதை செய்யாமல் விட்டு விடுகிறோம்.

இன்று அமைக்கப்படும் இந்து சமயப் பேரவை, இந்த நோக்கங்களை நிறைவேற்ற இந்து சமய சமூக அபிவிருத்தி நிதியம் ஒன்றை உருவாக்க முன்வந்திருப்பது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன் — என்றார்.

இந்நிகழ்ச்சியில் நல்லை குருமகாசந்நிதானம் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் உட்பட பலர் உரையாற்றினர். (ஒ)

## பண்டத்தரிப்பு கல்வி அபி. கழக

## ஆசிரிய தெரிவுப் பரீட்சை; இன்றும், நாளையும் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 29

பண்டத்தரிப்பு கல்வி அபிவிருத்திக் கழக ஆசிரிய தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்றும், நாளையும் இடம் பெறவுள்ளன.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகிய இடங்களில் மேற்படி நேர்முகப் பரீட்சைகள் காலை 8–30 மணி தொடக்கம் நடைபெறும்.

★ அருணோதயாக் கல்லூரி மண்டபம் — I :-
இன்று — அளவெட்டி கொத்தணி
நாளை — மல்லாகம் கொத்தணி

★ அருணோதயாக் கல்லூரி மண்டபம் — II :-
இன்று — அம்பனைக் கொத்தணி
நாளை — காங்கேசன்துறைக் கொத்தணி

★ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபம் I :-
இன்று — பண்டத்தரிப்புக் கொத்தணி
நாளை — இளவாலைக் கொத்தணி

★ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபம் — II :-
இன்று — தெல்லிப்பளைக் கொத்தணி

★ வட்டு இந்துக் கல்லூரி :-
நாளை — வட்டுக்கோட்டை கொத்தணி

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி :
இன்று — சுழிபுரம் கொத்தணி
நாளை — காரைநகர் கொத்தணி

பரீட்சார்த்திகள் சகல ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

## மலையகப் பதற்ற நிலை; சுதந்திரக் கட்சி ஆராயும்

கொழும்பு, ஜன. 29

மலையகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலை பற்றி சுதந்திரக் கட்சி நாடாளுமன்றக் குழு இவ்வாரம் கூடி ஆராயவிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பிரச்சினை பற்றி மக்களுக்கு விளக்குவதற்காக பொதுக் கூட்டம் ஒன்றை எதிர்வரும் 2 ஆம் திகதி நடத்தவும் சுதந்திரக் கட்சி திட்டமிட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இது விஷயத்தில் பதுளை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. எட்வின் விக்கிரமரத்தினா தீவிரமாகச் செயல்படுகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்ற அக்கறை இருக்குமாகில், மலையக தமிழ் இளைஞர்களைக் கண்டபடி கைது செய்து தோட்டங்களில் அமைதியின்மையை ஏற்படுத்த வேண்டாம் என்று இ. தொ. கா. தலைவர் தொண்டமான் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறார் என்று சுதந்திரக் கட்சி எம். பி. திரு. எட்வின் விக்கிரமரத்தினா குற்றஞ் சாட்டியுள்ளார். [ஒ-எ]

## ஆப்கன் சம்பந்தமான பாக். கொள்கை மாற்றம்

### ஐ. நா தீர்மானத்துக்கு ஆதரவு

இஸ்லாமபாத், ஜன. 29

ஆப்கனிஸ்தான் பிரச்சினையில் இதுவரை காலமும் கடைப்பிடித்து வந்த தமது நிலைப்பாட்டை பாகிஸ்தான் திடீரென்று மாற்றிக்கொண்டு விட்டது.

ஆப்கன் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐக்கிய நாடுகள் சபை செய்த சிபார்சை ஏற்கும்படி, ஆப்கன் அரசாங்கத்திற்கு எதிராகப் போரிடும் முஜாஹதீன் கெரில்லாக்களை பாகிஸ்தான் அரசு கேட்டுள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆப்கன் சம்பந்தமான..

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முஜாஹுதின் கெரில்லாக்கள் பாகிஸ்தானில் பெஷாவாரில் தங்கள் தலைமையகத்தை வைத்துக் கொண்டு, ஆப்கன் அரசுப் படைகளுக்கு எதிராக சண்டையிட்டு வருகின்றார்கள் என்பது தெரிந்ததே. சகல அமைப்புகளும் ஆப்கன் அரசும் அங்கம் வகிக்கும் இடைக்கால அரசு ஆப்கனிஸ்தானில் அமைக்கப்பட வேண்டும் என்று ஐ. நா. செயலாளர் வலியுறுத்துகின்றது.

பாகிஸ்தானில் சுமார் 35 லட்சம் ஆப்கன் அகதிகள் தற்சமயம் வசித்து வருகின்றனர். [இ-எ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஸ்ரீதரன் மகாலக்ஷ்மி

பருத்தித்துறை கந்த உடையார் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி ஸ்ரீதரன் மகாலக்ஷ்மி [மகா] பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர் [25-1-92] மாலை 6 மணிக்கு சிவபதமடைந்தார்.

இவர் செல்வராசா ஸ்ரீதரன் அவர்களின் அன்பு மனைவியும் கௌரிசங்கர் [கோபி] அவர்களின் அன்புத் தாயாரும், வேலுப்பிள்ளை பரம்சோதி - காலஞ்சென்ற திருமதி பரம்சோதி மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும், திருமதி திருஅருள் விஜயலக்ஷ்மியின் சகோதரியும் காலஞ்சென்ற பரஞ்சோதி தவராசாவின் அன்புச் சகோதரியும் திரு. அருளின் மைத்துனியும் சுரேஷ் [பிரான்ஸ்], ரமேஷ், தினேஷ் ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [29-1-92] புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. ஸ்ரீதரன்

ஸ்ரீமகால்,
பருத்தித்துறை. [19506]

## திருமதி சிவயோகம் சுப்பையா

19, பழம் வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி சிவயோகம் சுப்பையா 21-12-91 அன்று கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. சுப்பையா [முன்னாள் உப அதிபர், யாழ். இந்துக் கல்லூரி] வின் மனைவியும், திருமதி க. துரைரத்தினம் [ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி], தயாகரன் [பொறியியலாளர், U. K.], திருமதி ரோ. சத்தியகுமாரன், திருமதி பு. சிதம்பரநாதன் [ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி], ராகினி, பிரபாகினி ஆகியோரின் தாயாரும், யோகானந்தா சர்வமனன், நிவேதிதா, பாவனா ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள், அந்தியேட்டி ஆகியன கொழும்பில் நடைபெற்றன.

தகவல்:
திருமதி ப. சிதம்பரநாதன்

19, பழம் வீதி,
கந்தர்மடம். [19510]

## இராமலிங்கம் அம்பலவாணர்

கைதடி கிழக்கு திரு. இ. அம்பலவாணர் [முன்னாள் வத்தளை ஈஸ்வரி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்/ ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்] காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, சிவனேஸ்வரி, யோகேஸ்வரி, லோகநாதன் [ஆசிரியர் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை], மன்னாரைச் சேர்ந்த செல்வரத்தினம் ஆகியோரின் மாமனாரும், தாரணியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கைதடியில் செவ்வாய்க்கிழமை [28-1-92] இல் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. லோகநாதன் ஆசிரியர்
[மகன்]

கைதடி கிழக்கு,
கைதடி. [19517]

## முருகேசு குமரையா

[இளைப்பாறிய குடிசைக் கைத்தொழில் பரிசோதகர்]

கோப்பாய் வடக்கு, நாவற்கட்டையைச் சேர்ந்த திரு. முருகேசு குமரையா 28-01-1992 அன்று சிவபதம் அடைந்தார்.

இவர் கனகம்மாவின் [சோதி] அன்புக் கணவரும், இராஜராசேஸ்வரி, இராஜயோகேஸ்வரி [ஓமான்], சதானந்தன் [இலங்கை வங்கி, கொழும்பு], இராஜநகுலேஸ்வரி, நித்தியானந்தன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்சிற்றம்பலம் [விவசாய போதனாசிரியர், திருநெல்வேலி], விஜயரட்ணம் [சுகாதார பரிசோதகர், ஓமான்], சர்வேஜினி, சிவராசா [தொழில் நுட்ப உத்தியோகத்தர், வீடுகள் அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா], சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், டூலிப்குமார், சிஜிகலா, ராஜ்குமார், றுபேஸ்குமார், செல்வகுமார், நீரஜா, பிறியந்தி, நிசங்கன், நிரஞ்சன், நிரஞ்ஜினி, கோகுலன், நிசாந்தினி, ஜிறோசா, டிலுக்ஷ, ஹறிஷ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் கோப்பாய் இல்லத்தில் [29-01-92] இன்று பி. ப. 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சிவராசா
[மருமகன்]

கோப்பாய் வடக்கு,
நாவற்கட்டை. [19518]

### நம்பிக்கைக்குரிய தலைவர் தெரிவு:

# தெற்கு கருத்துக் கணிப்பில் பிரபாகரனுக்கும் வாக்குகள்!

கொழும்பு, ஜன. 29

நம்பிக்கைக்குரிய அரசியல் தலைவர் யார் என்று தென்னிலங்கையில் நடத்தப்பட்ட கருத்துக் கணக்கெடுப்பில் 35 பேர், அதாவது ஒரு சத வீதத்திற்குச் சற்றுக் கூடுதலானோர் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் என்று தெரிவித்துள்ளனர்.

'ராவய' சிங்கள வார இதழ் இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தி கடந்த ஞாயிறு இதழில் கருத்துக் கணிப்பு முடிவுகளை உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருந்தது.

இதன்படி இந்த கருத்துக் கணக்கெடுப்பில். ஐ.தே.க.வில் இருந்து பிரிந்து சென்று தற்போது தனிக் கட்சி அமைத்துள்ள லலித் அத்துலத் முதலிக்கே கூடுதல் வாக்குகள் கிடைத்துள்ளன.

இவருக்குக் கிடைத்த வாக்குகள் 707 ஆகும். ஜனாதிபதி பிரேமதாசா 50 வாக்குகளைப் பெற்று ஏழாவது இடத்தைப் பெற்றார்.

நம்பிக்கையான அரசியல் தலைவர் எவரும் இல்லை என்று 1,282 பேர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்துக் கணக்கெடுப்பில் 3,334 பேரின் கருத்துக்கள் அறியப்பட்டன என்றும் கருத்துக் கணக்கெடுப்பில் கலந்து கொண்டோரில் 54·65 சத வீதமானோர் 25 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவர்கள் என்றும் 'ராவய' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

இலங்கைக்குப் பொருத்தமான அரசியல் அமைப்பு எது? என்ற மற்றும் ஒரு கேள்விக்கு நாடாளுமன்றத்திற்குப் பதில் சொல்லக் கூடிய ஜனாதிபதி ஆட்சி முறைக்கு 1,455 பேரும் [43·64 வீதம்]—

நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு 1,128 பேரும் [33·84 வீதம்]—

சமஷ்டி அரசமைப்புக்கு 665 பேரும் [19·95 வீதம்]—

தற்போது உள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்கு 19 பேரும் [0·56 வீதம்] ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மற்றும் இனப்பிரச்சினை தீர்வுக்கு சிறுபான்மை மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று 2,237 பேரும் [67·08 வீதம்]—

சிறுபான்மையோர் பிரிந்து போக விரும்பினால் அதற்கு இடமளிக்கப்பட வேண்டும் என்று 103 பேரும் [3·08 வீதம்] தெரிவித்துள்ளனர்.

நாடு பிரிக்கப்படுவதற்கு அல்லது அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கு 918 பேர் [27·53 வீதம்] எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மக்களின் நம்பிக்கைக்குரிய அரசியல் தலைவர் யார் என்ற கேள்விக்கு, அரசியல் தலைவர்களும் அவர்கள் பெற்ற வாக்குகளும் வருமாறு:-

★ லலித் அத்துலத்முதலி — 708
★ சிறிமாவோ பண்டாரநாயக்கா — 644
★ தினேஷ் குணவர்த்தனா — 253
★ சந்திரிக்கா குமாரணதுங்க — 169
★ வாசுதேவநாணயக்கார — 78
★ அனுரா பண்டாரநாயக்கா — 55
★ ஆர்.பிரேமதாசா — 50
★ காமினி திஸநாயக்கா — 43
★ வேலுப்பிள்ளை பிரபாகரன் — 35
★ பேர்னாட் சொய்ஸா — 12
★ ரணில் விக்கிரமசிங்க — 2
★ கே.பி. சில்வா — 2

இந்த கருத்துக்கணக்கெடுப்பில் பங்குபற்றியவர்களில் 88 வீதத்துக்கு மேற்பட்டோர் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தராதரம் உடையவர்கள் என்று ''ராவய'' மேலும் தெரிவித்துள்ளது. [இ-10]

## மீண்டும்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டு அங்கத்தவர் குடும்பம் ஒன்றுக்கு — 3 கிலோ அரிசி, 250 கிராம் தானியம், 250 கிராம் சீனி ஆகியவையும்—

3 அங்கத்தவர் குடும்பம் ஒன்றுக்கு — 4 கிலோ அரிசி, 500 கிராம் சீனி, 250 கிராம் தானியம் ஆகியவையும்—

4 அங்கத்தவர் குடும்பம் ஒன்றுக்கு — 5 கிலோ அரிசி, 750 கிராம் சீனி, 750 கிராம் தானியம் என்பனவும்—

ஐந்தும், அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு — 6 கிலோ அரிசி, ஒரு கிலோ சீனி, ஒரு கிலோ தானியம் என்பவையும் வழங்கப்படும்.

சீனி ஒரு கிலோ 25 ரூபா 90 சதமாகவும், அரிசி [வெள்ளை] ஒரு கிலோ 14 ரூபா 80 சதமாகவும், தானிய வகை பருப்பு, பயறு, கௌபி ஆகியவற்றில் ஏதாவது ஒன்று கிலோ 50 ரூபாவுக்கும் வழங்கப்படும்.

நான்கு வாரத்துக்கு இந்த அடிப்படையில் பொருள்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## நாட்டின் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ 1981 இல் நாட்டின் பாதுகாப்புச் செலவினம் 110 கோடி ரூபாவாக இருந்தது. அது மொத்த தேசிய உற்பத்தியில் 1.6 சத வீதமாகவும் அரசின் செலவினத்தில் 2.9 சத வீதமாகவும் இருந்தது.

★ 1991 இல் நாட்டின் பாதுகாப்புச் செலவினம் ஆயிரத்து 670 கோடி ரூபாவாக உயர்ந்தது. இது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 5.49 சத வீதமாகவும் அரசின் செலவீனத்தில் 20 சதவீதமாகவும் இருந்தது.

புதிய உயர் கல்லூரி
New College of High Studies
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
Spoken English
With Grammar
by BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்
1-2-1992
காலை 11 மணி
[சி-1433]

# ஆசிரியர் சேவைப் பயிற்சி இனி விடுமுறை நாட்களில்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களது சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் இனிமேல் பாடசாலை விடுமுறை நாட்களிலேயே நடத்தப்படும்.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் பாடசாலை நாட்களிலேயே ஆசிரிய சேவைக்கால பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வந்தன. இதனால் மாணவர்களது கல்வி பாதிக்கப்பட்டு வந்ததைப் பலரும் சுட்டிக்காட்டியதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டுக்கான புதிய சேவைக்காலப் பயிற்சிகளைத் திட்டமிடும் செயலமர்வு ஒன்று அடுத்த மாதம் 4 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-5]

## அழுத்தம்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கூடி வெகுசனப் போராட்டங்களை நடத்துவது குறித்து முடிவு செய்தனர்.

தொடர் போராட்டத்தின் முதல் கட்டமாக எதிர்வரும் ஐந்தாம் திகதி யாழ்ப்பாணம் செயலகத்தின் முன்னால் மிகப் பெரிய அளவில் மறியல் போராட்டம் ஒன்று நடக்க உள்ளது.

மறியல் போராட்டம் ஆரம்பமாகும் முன்னர் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் மக்கள் ஊர்வலமாக வருவர். ஊர்வலத்தில் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், தாம் படும் கஷ்டங்களையும் விளக்கும் பதாகைகளையும், சுலோக அட்டைகளையும் தாங்கி வருவர்.

மறியல் போராட்டத்தின் இறுதியில் யாழ். அரசாங்க அதிபரிடம் மக்களின் குறைகளைத் தீர்க்கக் கோரும் மகஜர் ஒன்று கையளிக்கப்படும்.

மகஜரில் உள்ள கோரிக்கைகள் இரண்டு வார காலத்தில் நிறைவேற்றப்படாவிட்டால் வெகுசனப் போராட்டம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்படும் என்று அமைப்புக் குழுவினர் தெரிவித்தனர். இவற்றுக்கான ஒத்துழைப்பையும் அவர்கள் மக்களிடம் இருந்து கோரியுள்ளனர். [அ-5]

## ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 29

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இடை இடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. [உ-15]

## இன்று நடக்கும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 29

'' கிராமிய அபிவிருத்தி - அணுகுமுறைகளும் பிரச்சினைகளும்'' என்ற தலைப்பிலான தொடர் கருத்தரங்கின் மூன்றாவது நிகழ்வு யாழ். பல்கலைக்கழக விரிவுரை மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

வணிக முகாமைத்துவத் துறை தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் மேற்படி விடயம் சம்பந்தமான கருத்துரைகளை வழங்குவார். (ஓ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் ( பிறைவேட் ) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org